ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2248/36 - 2021 ඔක්තෝබර් මස 06 වැනි බදාදා - 2021.10.06

*2248/36 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 2/1976* (iii)

**1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டம்**

*1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின்கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டதும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

**ஜயம்பதி மொல்லிகொட,**
தவிசாளர்,
இலங்கைத் தேயிலைச் சபை.

கொழும்பு,
*2021, செத்தெம்பர் 15.*

**ஒழுங்கு விதிகள்**

காலத்திற்குக்காலம், திருத்தப்பட்டவாறான 1986 ஆம் ஆண்டு சனவரி 28 ஆந் தேதிய 386/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1986 ஆம் ஆண்டின் இலங்கைத் தேயிலைச் சபை (தேயிலை பொதியிலடைக்குநரைப் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(1) அதன் 4 (அ) என்னும் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :

"(ஆ) இவ்வொழுங்கு விதிகளின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு பதிவு தொடர்பாகவும் பின்வருமாறு பதிவுக்கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்:

| | | | |
|---|---|---|---|
| (i) | பெரிய அளவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | இருபத்தையாயிரம் ரூபா (ரூபா 25,000); |
| (ii) | நடுத்தரவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000); |
| (iii) | சிறியளவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | ஐயாயிரம் ரூபா (ரூபா 5,000); |
| (iv) | ஏற்றுமதிப் பொதியிலடைக்குநர் | - | இருபத்தையாயிரம் ரூபா (ரூபா 25,000).". |

1A – PG 5568 – 445 (2021/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் 6 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும்;

"6 (1) இவ்வொழுங்கு விதிகளின்கீழ் பொதியிலடைக்குநரின் பதிவு ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஒரு புதுப்பித்தல் கட்டணம் பின்வருமாறு அத்தகைய புதுப்பித்தல்கள் ஒவ்வொன்றுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்;

| | | | |
|---|---|---|---|
| (அ) | பெரிய அளவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000); |
| (ஆ) | நடுத்தரவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | ஐயாயிரம் ரூபா (ரூபா 5,000); |
| (இ) | சிறியளவிலான உள்ளூர் பொதியிலடைக்குநர் | - | இரண்டாயிரத்து ஐந்நூறு (ரூபா 2,500.00); |
| (ஈ) | ஏற்றுமதிப் பொதியிலடைக்குநர் | - | பத்தாயிரம் ரூபா (ரூபா 10,000); |

(3) "பொதியிலடைக்குநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும்:

"பெரியளவிலான உள்ளூர் தேயிலை பொதியிலடைக்குநர்" என்பது எந்த ஆளொருவரது அல்லது ஆட்கள் குழுவினதும் மாதாந்த விற்பனையளவு ஐயாயிரம் கிலோகிராமிற்கு (5000 கி. கி.) மேற்பட இருக்கின்றதோ அவ் ஆளொருவர் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும்.

நடுத்தரவிலான உள்ளூர் தேயிலை பொதியிலடைக்குநர்" என்பது எந்த ஆளொருவரது அல்லது ஆட்கள் குழுவினது மாதாந்த விற்பனை அளவு இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ கிராமிலிருந்து (2500 கி. கி.) ஐயாயிரம் கிலோகிராம் (5000 கி. கி.) வரை உள்ளதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழு எனப்பொருள்படும்;

"சிறியளவிலான உள்ளூர் தேயிலை பொதியிலடைக்குநர்" என்பது, எந்த ஆளொருவரது அல்லது ஆட்கள் குழுவினது மாதாந்த விற்பனை அளவு இரண்டாயிரத்து ஐந்நூறு கிலோ கிராம் (2500 கி. கி.) வரை உள்ளதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழு எனப்பொருள்படும்;

"ஏற்றுமதிப் பொதியிலடைக்குநர்" என்பது, ஏற்றுமதிக்காக அட்டைப்பெட்டிகளான அத்தகைய கொள்கலன்கள், தேயிலைப் பொதிகள், மரப் பெட்டிகள், கலன்கள், பீங்கான் குடுவை, கோரைப்புல் பொதி அல்லது சில்லறைப்பொதியின் வேறு ஏதேனும் வடிவத்தில் ஐந்து கிலோகிராமிற்கு (5 கி. கி.) விஞ்சாத பாவனையாளர் பொதிகளில் அல்லது பரிமாறல் பொதிகளில் தேயிலையைப் பொதியிடுகின்ற ஆளொருவர் அல்லது ஆட்கள் குழு எனப்பொருள்படும்;

10-254

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.